ஈரோடு தெற்கு மாவட்டக் கழக தொழில்நுட்ப அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர், தகவல் தொழில்நுட்ப அணி சந்தோஷ் விஜயகுமார் ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திவிட்டு பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். நிகழ்வில் மாநில, மாவட்ட , மாநகர, பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு, அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் நகர கழகத்தின் ஏற்பாட்டில் காந்தி பூங்கா அருகில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு மதிய உணவை முன்னாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ். சிவசங்கர் பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் ஜெயங்கொண்டம் நகர கழக செயலாளர், நகர் மன்ற துணைத் தலைவர் வெ.கொ.கருணாநிதி மற்றும் நகர கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமை! ஜலீல் முஸ்தபா நிகழ்ச்சி ஒருங்கிணைப்பில்

குவைத் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

GenZ DMK யாசர் அராபத் காணொலியில் சிறப்புரை!

குவைத், ஜூன் 10-

குவைத்தில் தி.மு.க. அயலக அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழா மக்கள் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமையில் GenZ DMK யாசர் அரபாத் காணொளி மூலம் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார்.

தி.மு.க. அயலக அணி தலைவர் டாக்டர். கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக் கோட்டை எம்.எம்.அப்துல்லா (முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்) ஆகியோரின் வழி காட்டுதலின்படி, கடந்த 5.6.2026. வெள்ளிக்கிழமை அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா குவைத் நாட்டில் மக்கள் எழுச்சியுடன் மிகப்பிரமாண்டமாக கொண்டாடப்பட்டது.

அமைப்பின் மகளிர் அணியினர் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய இவ்விழாவிற்கு, தி.மு.க., அயலக அணியின் குவைத் நாட்டின் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் தலைமை ஏற்றார், அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

அமைப்பின் இணைச்செயலாளர்கள் ஆயங்குடி ஜெ.சையது முஸ்தபா, சேகரை வெ.செல்ல துரை, குடந்தை சி.தியாகராஜன், துணைச் செயலாளர்கள் விழுப்புரம் ஜ.ஜஹாங்கீர், உளுந்தூர் பேட்டை மு.நஜீர் அகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைப்பின் தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் ராமநாதபுரம் பைசான் அலி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாட்டில் தற்போது இளைஞர்களிடம் அரசியல் புரிதலோடு எழுச்சியை உண்டாக்கி இருக்கும் Genz DMK Meetup எனும் ஓர் நிகழ்வை நடத்தி இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திய Genz DMK ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான யாசர் அராபத் காணொளி மூலம் கலந்து கொண்டு எழுச்சி உரையாற்றினார்.

அப்பொழுது தமிழகத்தில் நடக்கும் ஆட்சியின் அவல நிலை குறித்தும், கழகத்தின் செயல்பாடுகள் குறித்தும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்கு செய்த பல நலத்திட்டங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இந்நிகழ்வில் அமைப்பின் நிர்வாகிகள் குடந்தை த.மணிகண்டன், ராதாபுரம் அஜிஜுல்லா, விழுப்புரம் எஸ். அம்ஜாத், மயிலாடுதுறை ராஜலட்சுமி பாபு, அரியலூர் சௌமியா பாஸ்கரன், தானிப்பாடி சுல்தானா, தானிப்பாடி சே.அஸ்ரப் அலி, உடையார்பாளையம் செந்தில்குமார், பண்ருட்டி ஓ.பி.எஸ். சிவராமன், திருக்கோவிலூர் அ.பொன்முடி, அணைக்காடு ரோம்லஸ் தேவசகாயம், அரியலூர் பாஸ்கரன், கூத்தாநல்லூர் ஏ.சாகுல் ஹமீது, பரங்கிப்பேட்டை எஸ்.முகமது உசேன், கொரடாச்சேரி காளிமுத்து, கோட்டை பி.மோதிலால், ஆத்தூர் ஜான் பாஷா, மங்கலம் பேட்டை அப்துல் முஜீர், தியாகதுருகம் பி.காதர், லட்சுமாங்குடி சசிகுமார், பரமக்குடி மோகன், திருவாரூர் திருவரங்கன், விருத்தாசலம் ஜெ.முபாரக், உளுந்தூர் பேட்டை என்.சுப்பிரமணியன், குடந்தை ஆர்.முருகன், கள்ளக்குறிச்சி சின்னசாமி மற்றும் மருத்துவர் கிளாட்வின் பாக்கியராஜ், தளபதி பேரவை பாவாஷா கவிஞர் மற்றும் எழுத்தாளரான நிர் மலா தேவி தமிழரசன், சமூக ஆர்வலர் சாமுண்டீஸ்வரி, சமூக ஆர்வலர் ரிஸ்வான்,

கூட்டணிக் கட்சிகளான திராவிடர் கழகம், தே.மு.தி.க., ம.ஜ.க., த.மு.மு.க., எஸ்.டி.பி.ஐ, தமிழ் அமைப்புகளான நந்தவனம், வெளிநாடு வாழ் தமிழர்கள் நல சங்கம், தமிழ்நாடு பொறியாளர் குழுமம், அகில இந்திய திருவள்ளுவர் பத்திரிக்கையாளர் சங்கம், கலகலப்பு நண்பர்கள், தமிழ்நாடு முஸ்லிம் கலாச்சார பேரவை, உதவும் கரங்கள், குவைத் தமிழ் ஓட்டுநர் சேவை மையம், தமிழர்கள் ஓட்டுநர் சேவை மையம், குவைத் தமிழ் மக்கள் சேவை மையம் மற்றும் பல சமூக ஆர்வலர்களும், சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு மறைந்த முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் அவரின் புகழையும், அவர் தமிழக மக்களுக்கு செய்த தொலைநோக்கு திட்டங்களையும் புகழ்ந்து கூறினார்.

நிகழ்வில் முத்தாய்ப்பாக விழா மேடையில் முழுவதும் பெண்கள் மட்டுமே அமர வைத்து திராவிட முன்னேற்ற கழகம் என்னாளும் பெண்களுக்கு பாதுகாப்பாகவும், பெண்களை மதிக்கக் கூடிய இயக்கமாகவும் இருக்கும் என்பதை பறைசாற்றினர்.

இந்நிகழ்வில் பல மாற்றுக் கட்சி சகோதரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இதில் திருப்பத்தூர் மாவட்டம், காட்டேரியை சார்ந்த அமுல்ராஜ், ஏஞ்சலின் பிரதிபா தம்பதியினர் கணவன் மனைவியாக வந்து தங்களை இயக்கத்தில் இணைத்துக் கொண்டது சிறப்புமிக்க தருணமாக இருந்தது.

விழாவில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு 103 வது பிறந்தநாள் வாழ்த்து கூறும் விதமாக அவரின் உருவம் பதித்த கேக் வெட்டப்பட்டது அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது. கேக் வெட்டும் தருணத்தில் வாழ்க... வாழ்க.. வாழ்கவே.. கலைஞர் புகழ் வாழ்கவே... என கழக உணர்வாளர்களின் முழக்கம் அரங்கை அதிர செய்தது.

இந்நிகழ்வின் இறுதியில் அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவு மணி மற்றும் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரபீக் ஆகியோர் நன்றி கூறினர்.

அனைவருக்கும் இரவு உணவு வழங்கப்பட்டது.

மின்வெட்டுப் பிரச்சினையை திசை திருப்ப

'ஹார்ட் டிஸ்க்' திருட்டு பிரச்சினையை கிளப்பும் த.வெ.க. அரசு!

'தி இந்து' நாளேடு அம்பலம்!

சென்னை, ஜூன் 10-

தமிழ்நாடு மின் விநியோக கழக தலைமையகத்திலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்பட்ட ஹார்ட் டிஸ்க்குகளில் முக்கிய ஆவணங்கள் எதுவும் இல்லை என 'தி இந்து' ஆங்கில நாளேடு கட்டுரை வெளியிட்டுள்ளது. இதன் மூலம், மின் வெட்டு பிரச்சினையை திசை திருப்பும் த.வெ.க. அரசின் முயற்சி தோல்வியைத் தழுவியுள்ளது.

'தி இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள சிறப்பு செய்தியில், சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் விநியோக கழக தலைமையகத்தில், கடந்த மே மாதத்தில் 18 ஹார்ட் டிஸ்குகள் மாயமானதாகவும்,

இந்த ஹார்ட் டிஸ்குகள் திருட்டு குறித்து, காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஹார்ட் டிஸ்குகளில் மின்துறை தொடர்பான முக்கிய ஆவணங்கள் இருந்தாகவும் கூறப்பட்டது என்றும், அதே நேரத்தில் ஹார்ட் டிஸ்குகள் திருட்டு விவகாரம், மின்வெட்டை திசை திருப்பும் முயற்சி என்றும் விமர்சனங்கள் எழுந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணை நடத்தி வந்த பெருநகர காவல்துறையின் சிறப்புக்குழு, புலன் விசாரணை மேற் கொண்டு, பெங்களூருவைச் சேர்ந்த ஒரு நபரிடமிருந்து 34 ஹார்ட் டிஸ்குகளை மீட்டது என்று காவல்துறை அதிகாரிகள் தெரிவித்ததாக சுட்டிக்காட்டியுள்ளது.

ஆண்டு பராமரிப்புக்கான ஒப்பந்த ஊழியர், அரக்கோணத்தைச் சேர்ந்த கோபிநாத் என்பவர், இந்த ஹார்ட் டிஸ்குகளை திருடி, பெங்களூருவில் உள்ள தனது கூட்டாளி மனோகர் என்பவருக்கு விற்றுள்ளதாக மூத்த காவல்துறை அதிகாரிகள் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, ஹார்ட் டிஸ்குகளில் அழிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் மீட்கப்பட்டுவிட்டதாகவும், ஆனால், அதில், குற்றச்சாட்டுக்குரிய தகவல்கள் எதுவும் இல்லை என்றும் காவல் துறை அதிகாரிகள் தெரிவித்தனர் என்றும், 'தி இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், மின் வெட்டு பிரச்சினையை திசை திருப்பும் த.வெ.க. அரசின் முயற்சி தோல்வியைத் தழுவியுள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

புதுச்சேரி ஆர்.வி.ஜானகிராமன்

ஜூன் 10 (2019)

இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கி, தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் – உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்த இவர், பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளராக பொறுப்பு வகித்து, மாநிலத்தில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஐந்து முறை நெல்லித்தோப்புத் தொகுதியில் தொடர்ந்து வெற்றி பெற்ற இவர், பொதுப்பணித் துறை அமைச்சராகவும் – எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவி வகித்தார்.

1996ல் முதல்வராகி, மாநில முன்னேற்றத்திற்கு பாடுபட்டவர்.

2005ஆம் ஆண்டு தலைமைக் கழகத்தின் சார்பில் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களையும் முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"எளிமைக்கு இலக்கணம் தேடினால் திரும்பிய பக்கமெல்லாம் தெரிகிற உருவம் புதுவை ஆர்.வி. ஜானகிராமன் தான்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

"புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ந்து இயக்கம் கம்பீரமாக நிற்கவும், திராவிட இயக்கத்தின் கொள்கை மாநிலத்தில் எங்கும் பரவவும் பாடுபட்டவர் – ஓடி ஓடி உழைத்தவர் திரு ஜானகிராமன்" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கோவை மாநகர் மாவட்ட மாணவர் அணி கூட்டம்!

கோவை, ஜூன் 10 -

கோவை மாநகர் மாவட்ட பகுதி கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வடகோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (10.06.2026 - புதன் கிழமை) மாலை 5.00 மணியளவில் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவுறுத்தலின்படி, மாநில மாணவர் அணி செயலாளர் ஜெ.வீரமணி வழிகாட்டுதலின்படி கோவை மாநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் தலைமையில், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் விஜி கோகுல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.பாண்டி, பி.பைந்தமிழன். ஆர்.நந்தகுமார், ஸ்ருதிபிரியா, ஜெகதீசன் மற்றும் பகுதி அமைப்பாளர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் கோவை மாநகர் மாவட்ட பகுதி கழக மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜெ. அன்பழகன்

ஜூன் 10 (2020)

மிசா பழக்கடை ஜெயராமன் மகனான இவர், தனது பள்ளிப் பருவம் முதலே தீவிர கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் தியாகராயர் நகர் பகுதியில் சார்பு மன்றச் செயலாளர், பகுதி பிரதிநிதி, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர், பகுதிக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகச் செயலாளர் என படிப்படியாக, சார்பு மன்ற செயலாளர் முதல் மாவட்டச் செயலாளர் வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் சென்னை மாவட்ட தளகர்த்தர்களில் ஒருவராக விளங்கியதோடு, கலைஞர் அவர்களைத் தனது தந்தையின் இடத்தில் வைத்துப் போற்றியவர். தியாகராயர் நகர் பகுதியிலும், ஒருங்கிணைந்த தென்சென்னை மாவட்டத்திலும், பிறகு சென்னை மேற்கு மாவட்டத்திலும் கழகத்திற்குச் சிறப்பாக வலுவூட்டியவர்.

கழகத் தலைவர் அவர்கள் இளைஞரணிச் செயலாளராக இருந்த காலம்தொட்டே அவரது நம்பிக்கை மிகுந்த உடன்பிறப்பாக, கொள்கைத் தோழனாக, இயக்கத்தின் இலட்சிய சகோதரன் என்கிற உணர்வுடன் நெருங்கிப் பழகியவர்.

2001 தியாகராயர்நகர் தொகுதியிலும், 2011, 2016களில் சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

1976ல் இந்திராகாந்திக்கு கருப்பு கொடி காட்ட திட்டமிட்டதாக கைது மற்றும் 1986ல் சட்டநகல் எரிப்பு போராட்டம், இந்தி திணிப்பு போராட்டம், விலைவாசி போராட்டம் என கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, அப்போராட்டங்களை முன்னெடுத்து வெற்றிபெற பாடுபட்டவர்.

"மக்கள் பணியிலேயே தன்னுயிர் ஈந்த அன்புச் சகோதரர் ஜெ.அன்பழகனின் பொதுவாழ்வு – கழகப்பணி – தியாக உணர்வுக்குத் தலைவணங்கி, கண்ணீர் பெருக்குவதன்றி, வேறு வழி எனக்குத் தெரியவில்லை" என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.